KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# கலையியல் கல்வி

# PENDIDIKAN KESENIAN

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

ஆண்டு
TAHUN
3





RM7.80
ISBN 978 - 967 - 2046 - 20 - 2
9 789672 046202
ET193002

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak;

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

**(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)**

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# கலையியல் கல்வி ஆண்டு
# PENDIDIKAN KESENIAN TAHUN 3

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி




**Penulis**
Othaya Kumaran Kandasamy BCK., PJK
Asihwiniy Francisco
Risikesh Subramaniam

**ஆசிரியர்கள்**
உதயகுமாரன் கந்தசாமி BCK., PJK
அஷ்வினி பிரான்சிஸ்கோ
ரிஷிகேஷ் சுப்ரமணியம்

**Editor**
Vaani Subramaniam
Vanitha Darman

**பதிப்பாசிரியர்கள்**
வாணி சுப்ரமணியம்
வனிதா தர்மன்

**Pereka Bentuk**
Prabu Palani
Amos Raja Rajalingam

**வடிவமைப்பாளர்**
பிரபு பழனி
ஆமோஸ் ராஜா ராஜலிங்கம்

**Ilustrator**
Azrul Helmi Bin Abd. Wahab
Maseh Bin Supian

**ஓவியர்கள்**
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
மாசேஹ் பின் சுப்பியான்



**Multi Educational Book Enterprise**
2018

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No Siri Buku: 0052

KPM2018 ISBN 978-967-2046-20-2

Cetakan Pertama 2018

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:18 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- Jabatan Pendidikan Seni Visual, IPG Kampus Sultan Abdul Halim, Sungai Petani, Kedah.
- SJKT Ladang Ulu Bernam 2, Perak.
- SJKT Jalan Yahya Awal, Johor Bahru.
- SJKT Taman Tun Aminah, Johor Bahru.
- Persatuan Silambam Porr Kalai, Kedah.

## உள்ளடக்கம்


முன்னுரை iv
பட உருக்களும் விளக்கங்களும் vi
கருவியும் உபகரணமும் 1
கலைமொழி 2
இசைமொழி 3
கலையியல் திட்ட நடவடிக்கை பருவம் 1 4
அலகு 1 இயற்கையும் கோடுகளும் 6
அலகு 2 சுற்றுச் சூழலும் நாமும் 17
அலகு 3 நேசத்தைப் பதிப்போம் தேசத்தை மதிப்போம் 25
அலகு 4 தொங்காடி 34
அலகு 5 பாரம்பரியத்தைக் காப்போம் 43
கலையியல் திட்ட நடவடிக்கை பருவம் 2 54
அலகு 6 வெற்றி நமக்கே 56
அலகு 7 கீறல் கைவண்ணம் 66
அலகு 8 தெளித்தலும் தெறித்தலும் 74
அலகு 9 பொம்மை உருவகம் 80
அலகு 10 வீரக் கவசங்கள் 86
காட்சிக்கலைக் கல்வி மதிப்பீடு 93
இசைக்கல்வி மதிப்பீடு 95
கலைச்சொல் அகராதி (காட்சிக்கலை) 97
கலைச்சொல் அகராதி (இசைக்கல்வி) 98



KPM

# முன்னுரை

மூன்றாம் ஆண்டிற்குரிய இக்கலையியல் கல்வி, மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு பரிந்துரைத்த ஆவண அடிப்படையில் காட்சிக் கலைக்கல்வியும் இசைக்கல்வியும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் உருவாக்கப்பட்டது. கலைமொழி, கலைத்திறன், ஆக்கத்திறன், புத்தாக்கத்திறன், கலையை மதித்து போற்றுதல், கலையியல் திட்ட இடுபணி போன்ற நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

காட்சிக் கலைக்கல்வியும் இசைக்கல்வியும் 10 அலகுகளாக முறையாகத் தொகுக்கப்பட்டு, பருவம் ஒன்று 5 அலகுகளாகவும் பருவம் இரண்டு 5 அலகுகளாகவும் வகுக்கப்பட்டுள்ளது. முதலாம் பருவத்திற்கும் இரண்டாம் பருவத்திற்கும் ஏற்றாற்போன்று, காட்சிக் கலைக்கல்வி, இசைக்கல்வி ஆகிய இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆர்வத்தையும் கலைத்துறையில் அவர்களின் ஈடுபாட்டினையும் மேம்படுத்தும் நோக்கில், அனைத்து தலைப்புகளுக்கும் செய்முறைப் பயிற்சி காணொளியாக உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டு முதல் நான்கு நிமிடத்திற்குள் மாணவர்களைச் செய்முறைப் பயிற்சிக்குத் தயார்படுத்தும் நோக்கில் இந்தக் காணொளி தயார் செய்யப்பட்டுள்ளது. அதோடு அதற்குரிய இணையத்தளமும் மூன்றாம் ஆண்டிற்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை இணையத்தள நோக்குக் குறியீடுகளான QR & AR பயன்பாட்டின்வழி கண்டு, கற்று மாணவர்கள் பயன் பெறலாம்.

மாணவர்களின் ஆக்கத்திறனை மேலும் வெளிக்கொணர, புதிய அங்கமாக ஒரு புத்தாக்க உருவாக்கமும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. புத்தாக்கக் கருவியின் உருவாக்கம் அதன் செயலாக்கம், செய்முறைப் பயிற்சி, செயல்பாடு ஆகியவை மாணவர்கள் செயல்முறைப்படுத்த விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இசைக்கல்வியானது அதன் அடிப்படைக் கூறுகள், இசைக் கருவிகள், இசைக்கும் முறைமை ஆகியவற்றோடு மாணவர்களின் ஆர்வம் இசைத்துறையில் மேலோங்கும் வண்ணம் பல்வேறு நிலையில் இசைக்குரிய நடவடிக்கைகள் இப்பாட நூலில் இடம்பெற்றுள்ளன. இசை நடவடிக்கை, இசை ஒலி, பாடும் முறை, உச்சரிப்பு, இராகம் ஆகியவற்றோடு முழுமையாக இசை அமைக்கப்பட்ட பாடல்கள் உள்ளடக்கிய குறுவட்டும் இப்பாட நூலில் வழங்கப்பட்டுள்ளது.

கலையியல் கல்வியில் 21 ஆம் நூற்றாண்டு பயிற்றியல் (Abad ke-21), உயர்நிலைச் சிந்தனைத்திறன் (KBAT), விரவிவரும் கூறுகள் (EMK), சிந்தனைக் குறிவரைவு (i-THINK), தகவல் தொழில்நுட்பம், எதிர்காலவியல் ஆகிய கூறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதன் அடைவு நிலையினை மாணவர்கள் பெறும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் திறனைப் பயன்மிக்க முறையில் மேற்கொள்ள ஒவ்வொரு பக்கத்திலும் ஆசிரியர் குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இடம்பெற்றுள்ள படவுருக்களும் விளக்கங்களும் இப்பாட நூலை எளிய நடையில் பயன்படுத்த பெரிதும் துணை நிற்கும்.

அனைத்து நிலையிலும் மாணவர்கள் சிறப்பான அடைவு நிலையினைப் பெறும் நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் சிறப்பாக உருவாக துணை நின்ற மலேசியக் கல்வி அமைச்சின் பாட நூல் பிரிவிற்கும் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவிற்கும் உதவிக் கரம் நீட்டிய மற்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலையியல் கற்போம்! கலைத்திறன் வளர்ப்போம்!

நன்றி,
ஆசிரியர்கள்

# பட உருக்களும் விளக்கமும்




ஆசிரியரும் மாணவரும் இசை நடவடிக்கையை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ள பாடலும் பயிற்சியும் துணைபுரியும்.




தடம்

கற்றல் திறன் எண்

ஆசிரியர் குறிப்பு:
கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள ஆசிரியருக்கான கூடுதல் வழிகாட்டி


காட்சிக்கலைப் பக்கம்


இசைப் பக்கம்


உயர் நிலைச் சிந்தனை


தகவல்


பாதுகாப்பு



நடவடிக்கை


செய்முறைப் பயிற்சி


ஆசிரியர் குறிப்பு


நிரலொழுங்கு வரைபடம்


பயிற்சி



**இணையத் தளம்**
QR நோக்குக் குறியீடு

App Store | Google play

**ஜாப்பரைப் (ZAPPAR) பெற இங்கு நோக்குக**

App Store | Google play

AR நோக்குக் குறியீடு

# கருவியும் உபகரணமும்

மூன்றாம் ஆண்டிற்கான கலையியல் கல்வி பாடத்திற்குரிய கருவி மற்றும் உபகரணங்களைக் கண்ணோட்டமிடுவோம்.

## காட்சிக்கலை

உலர்ந்த வண்ணம்



திரவ வண்ணம்




மெழுகு வண்ணம்




ஒட்டுப் பொருள்



தாள்கள்



அலங்காரப் பொருள்



## இசை

உடலிசை



இசைக் கருவிகள்




இசைக்கலை



## கலை மொழி

மாணவர்களே, இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ள கலைக்கூறுகள் மற்றும் உருவாக்குதலின் கோட்பாடுகளைக் கண்டறியுங்கள். அதுபற்றி ஆசிரியரிடம் கலந்துரையாடுக.

### கலைக்கூறுகள்




### உருவாக்குதலின் கோட்பாடுகள்

# இசையின் மொழி

## இசைக்கூறுகள்

**தொனி**

குரல் ஓசையும்
இசைக் கருவிகளின்
தொனி வேறுபாடும்



**சுதி**

உயர்ந்த, தாழ்வான ஓசை



தாழ்வான
ஓசை



உயர்ந்த
ஓசை

**ஒலித்தன்மை**

மென்மையான
இசை



தடித்த இசை

**இராகம்**

நீண்ட, குறுகிய இராகம்



நீண்ட ஒலி



குறுகிய ஒலி

**வேகம்**

இசையின் வேகம்



விரைவாக



மெதுவாக

**இயக்கம்**

உரத்த மெல்லிய ஒலி



உரத்த
ஒலி



மெல்லிய
ஒலி

## திட்ட நடவடிக்கை - பருவம் ஒன்று

அன்பு மாணவர்களே, முதல் பருவ முடிவில் நீங்கள் ஒரு திட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமல்லவா? நண்பர்களுடன் சேர்ந்து கலந்தாலோசித்து திறன்மிக்க நடவடிக்கைக்கு ஆயத்தமாகுங்கள்!

### நடவடிக்கைக்கு முன்

1. மாணவர்கள் அலகு 1 முதல் அலகு 5 வரை பயின்று உருவாக்கிய ஆவணங்களில் (காட்சிக் கலைக்கல்வி) படைப்புக்கு ஏற்புடையவைகளைத் தேர்ந்தெடுத்தல்.
2. மாணவர்களைக் குழு முறையில் பிரித்து நடவடிக்கைகளைச் செய்யப் பணித்தல்; பயிற்சிகளைச் செய்தல்.

**எடுத்துக்காட்டு**

குழு 1 பாடல் பயிற்சி
குழு 2 அசைவு - நடனம் - நாடகம்
குழு 3 இசைக் கருவிகள் இயக்குதல் - இசைத்தல்
குழு 4 படைப்புக்கான பொருள்கள் - தயார்படுத்துதல்

### நடவடிக்கையின் போது

1. மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை நயமுடன் செய்தல்.
2. மாணவர்கள் தேவையான ஆவணங்களைப் பயன்படுத்தி படைப்புகள் செய்தல்.

### நடவடிக்கைக்கு பின்

1. மாணவர்கள் பயன்படுத்திய பொருள்களை முறையே அடுக்குதல்; இடத்தைத் தூய்மை செய்தல்.
2. மாணவர்கள் காட்சிப் பதிவுகளைச் செய்து திரட்டேடு செய்தல்.







ஆசிரியர் குறிப்பு

3.3.1 (i-iv)
3.3.2
3.3.6
3.3.7

- முதல் பருவ திட்ட நடவடிக்கைக்கான முன்னேற்பாடு, படைப்பு, தேவையான பொருள்கள் ஆகியவற்றைத் தயார் செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டல்.
- மாணவர்கள் திட்ட நடவடிக்கையை முறையாக திட்டமிட்டபடி மேற்கொள்ளத் தூண்டுதல்.
- படைப்பிற்கான இசையைத் தயார் செய்தல்.
- அலகு 1 முதல் 5 வரையிலான பாட உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி படைப்பிற்கான பொருள்களைத் தயார் செய்து படைப்பினைப் படைத்தல்.
- ஒற்றுமை, தலைமைத்துவம் ஆகிய பண்புக் கூறுகளை அமலாக்குதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறிவும் ஆர்வமும்

# அலகு 1 இயற்கையும் கோடுகளும்

இயற்கையின் படைப்பில்தான் எத்தனை கோடுகள். ஒவ்வொன்றும் ஒருவிதம். கோடுகளின் தன்மைப் பற்றி கலந்துரையாடுக.




ஆசிரியர் குறிப்பு

1.1.1

- புனையா ஓவியப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை இயற்கை படைப்போடு தொடர்புபடுத்தி கலந்துரையாடுதல்.


**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல். **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

## பெருக்கல் கோடு

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட குறுக்குக் கோடுகளைப் பெருக்கல் கோடு என்று கூறுவர். பெருக்கல் கோடுகளில் சில உதாரணங்கள்.

### பல்வேறு உலர்ந்த பொருள்களில் பல்வேறு வகையான கோடுகள்.

1





வண்ணக்கோல்


2





மெழுகு வண்ணம்


3





எழுதுகோல்

4





சித்திரத் தூவல்

5






ஊற்றுத் தூவல்

ஆசிரியர் குறிப்பு

2.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

# பார்ப்போம் பதிவு செய்வோம்

## நடவடிக்கை 1

படத்தில் காணப்படும் கோடுகளை வரைக.

1


ஒளிரும் கோடு

2


நேர்க்கோடு

3


தடித்த கோடு

4


சிக்குக் கோடு

ஆசிரியர் குறிப்பு


1.1.1(ii)

- புனையா ஓவியப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை இயற்கை படைப்போடு தொடர்புபடுத்தி கலந்துரையாடுதல்.
- இயற்கைப் படைப்பில் தென்படும் கோடுகளைச் சித்திரத்தாளில் பதிவுச் செய்தல்.

# உள்ளங்கை கோடுகள்

## நடவடிக்கை 2

அ. குழுவாக அமருங்கள்.
ஆ. உங்கள் உள்ளங்கையைப் பாருங்கள்.
இ. இப்போது அதில் தென்படும் கோடுகளை உருப்பெருக்கியைக் கொண்டு உற்று நோக்குங்கள்.
ஈ. நண்பர்களோடு கலந்தாலோசித்து அதில் இடம்பெற்றுள்ள கோடுகளை வரைந்து பெயரிடுங்கள்.
உ. அனைவரின் உள்ளங்கையிலும் ஒரே மாதிரியான கோடுகள் உள்ளனவா என்பதை விவாதியுங்கள்.



**ஆசிரியர் குறிப்பு**

1.1.1(i)
- உள்ளங்கையை உற்று நோக்கி, அதில் இடம்பெற்றுள்ள கோடுகளைப் பற்றி கூறப் பணித்தல்.
- பெருக்கல் கோடுகளை அடையாளங்காணுதல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# உலர்ந்த பொருள்களைக் கொண்டு புனையா ஓவியம் படைப்போம்.



உலர்ந்த வண்ணக் கருவியைக் கையாளும் முறை

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1
2.1.1(i)

- காட்சிக் கலை மொழிக் கூறுகளை மாணவர்களுக்கு விளக்குதல்.
- பெருக்கல் நுட்ப கலைப்படைப்பை உருவாக்கும் முறையையும் பயன்படுத்தும் உபகரணங்களையும் மாணவர்கள் அறிந்து பயன்படுத்த வழிகாட்டியாக இருத்தல்.



# என் அன்பு இல்லம்


மாணவர்களே வாருங்கள். பெருக்கல் கோட்டினைக் கொண்டு வீடு வரைவோம்.



அலை கோடு



மெல்லிய கோடு



வளைந்த கோடு

1 பல்வேறு கோடுகளைக் கொண்டு புனையா ஓவியம் வரைதல்.

2 வரையும்போது கலைக்கூறு மற்றும் உருவாக்குதலின் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.




## கருவியும் பொருளும்

சித்திரத்தாள்




எழுதுகோல்



வண்ணக்கோல்



சித்திரத் தூவல்






3 உலர்ந்த பொருள்களைக் கொண்டு பெருக்கல் கோட்டினை வரைய வேண்டும்.

**தகவல்**

கோடுகள் தெளிவாகத் தெரிய வரையும் கருவிகள் கூர்மையாக இருக்க வேண்டும்.



வரைந்த புனையா ஓவியத்தைக் காட்சிக்கு வைக்கவும்.

**தகவல்**

படைப்பின் இறுதியில் அட்டையைக் கொண்டு சட்டகம் அமைத்து அதனைச் சுவற்றில் மாட்டி அழகுப்படுத்தலாம்.

ஆசிரியர் குறிப்பு

3.1.1(i-iv)
4.1.1
4.1.2

- பெருக்கல் நுட்பத்தில் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்த தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தொடர்பு கொள்ளும் திறன்



# ஒலியின் தன்மை



ஒலித்தன்மை என்பது ஒரு பாடலில் அல்லது இசையில் உருவாகும் தடித்த அல்லது மென்மையான அடுக்காகும். கீழே சில உதாரணங்களைக் காண்போம்.

## மெல்லிய ஒலித்தன்மை



பக்க இசையின்றி ஓர் இசைக் கருவியின் ஒலி.



இசைக் கருவிகளின் துணையின்றி தனியாகப் பாடலைப் பாடுதல்.

## தடித்த ஒலித்தன்மை



பல்வகை பக்க இசைக் கருவிகளைக் குழுவில் இசைத்தல்.



குழுவினர் பாடும் பாடலின் ஒலி.



## தகவல்

ஒலித்தன்மை கேட்கப்படும் பல்வேறு ஒலிகளின் சேர்க்கையாகும். அவை மெல்லிய ஒலி (ஓர் ஓசை) தடித்த ஒலி (பல ஓசை) கொண்டதாகும்.



| ஒலித்தன்மை வகைகள் | விளக்கம் | உதாரண ஒலி |
|---|---|---|
| மோனோபோனி | ஒரே ஒலி. ஒலிச் சேர்க்கை இல்லை. | தடம் 1 |
| ஹோமோபோனி | மேல்நாட்டு இசைகளில் அதிகம் காணப்படும் கீத்தார் அல்லது பியானோ இணைந்த இன்னிசை. | தடம் 2 |
| போலிபோனி | பல ஒலி கொண்டதாகும். பாடலோடு இன்னிசை கலந்திருக்கும். | தடம் 3 |


ஆசிரியர் குறிப்பு

1.2.1
1.2.3

- மாணவர்களுக்குக் குரல் நயம் தொடர்பான தகவல்களைத் தேடப் பணித்தல்.
- மெல்லிய, தடித்த மற்றும் இன்னிசை கலந்த ஒலி வேறுபாடுகள் கொண்ட பாடல்கள் பாடி அறிதல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# தாளத்தை இசைப்போம்




## விளையாடும் வழிமுறை

1. ஒரு குரல் நய மரத்தைத் தயார் செய்து எண் அட்டைகளை ஒட்டவும். எண் அட்டைகள் கீழ்க்காணும் ஒலிகளைக் கொண்டிருக்கும்.
2. மாணவர்களை இரு குழுவாகப் பிரிக்கவும். ஒரு குழுவில் உள்ள மாணவர் ஒருவர் ஓர் எண் அட்டையை எடுக்க வேண்டும். அட்டையின் எண்ணுக்கு ஏற்ப இசைக்கப்படும் ஒலியைச் செவிமடுத்து, இரு குழு மாணவர்களும் தங்களின் குரல் நய அட்டையை நிறைவு செய்ய வேண்டும்.
3. எண் அட்டைகள் முடியும் வரை விளையாட்டு தொடரும்.
4. குரல் நய அட்டையைச் சரியாகப் பூர்த்தி செய்த குழுவிற்குப் புள்ளிகள் வழங்கப்படும்.

| எண் அட்டை | விசில் ஓசை |
|---|---|
| 1 | விசில் ஓசை |
| 2 | குழு இசை |
| 3 | கோங் இசை |
| 4 | பறவைகள் கீச்சிடும் ஓசை |
| 5 | மழை + இடி + காற்று ஓசை |
| 6 | புலி உறுமும் ஓசை |
| 7 | இசை இல்லாப் பாடல் |
| 8 | பாடலைக் கீத்தார் இசையுடன் பாடுதல் |

தடம் 4,5,6,7,8,9,10 &11

| குரல்நயம் | |
|---|---|
| மென்மை | தடித்த |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |

ஆசிரியர் குறிப்பு

1.2.1
1.2.3

- விளையாட்டைக் குழுவாக விளையாடத் தூண்டுதல்.
- ஒலி நயத்தின் வேறுபாட்டை அறிந்து பாடத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** தகவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** ஒற்றுமை

## மூச்சுப் பயிற்சி வழிமுறைகள்

நயமாகப் பாடுவதற்கு முறையான மூச்சுப் பயிற்சி அவசியம்.

### வழிமுறை 1

- மேசையின் மீது மல்லாந்து படுக்கவும்.
- வயிற்றின் மேல் சில புத்தகங்களை வைக்கவும்.
- மூச்சை 3 வினாடிக்கு இழுக்கவும்.
- மூச்சை இழுக்கும்போது புத்தகம் மேல் ஏறும்.
- மூச்சை மெல்ல மெல்ல விட புத்தகம் கீழ் இறங்கும்.



### வழிமுறை 2

மூச்சை மூக்கு வழியாக இழுத்து வாய் வழியாக விடவும்.







### வழிமுறை 3





- மூச்சை இழுத்துக் கொண்டே கைகளை மெதுவாகத் தூக்கவும்.
- பிறகு மூச்சை வாய்வழியாக விடும்போது ‘ஷ்...’ என்ற ஓசையுடன் மெதுவாகக் கைகளைக் கீழே இறக்கவும்.



2.2.1 ஆசிரியர் குறிப்பு

- மேலே குறிப்பிட்டதுபோல் முறையான மூச்சுப் பயிற்சியை மேற்கொள்ள ஊக்குவித்தல் வேண்டும்.
- மாணவர்கள் அனுபவங்களைக் கூற தூண்டுதல்.

**வி.வ.கூ:** தகவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# வாருங்கள் நகர்வோம்

தடம் 12 Lagu
தடம் 13 Instrumental

ஓடி இங்கே வாருங்கள்
ஒற்றைக் கோட்டைப் பாருங்கள்
வானவில்லைப் போலே இங்கே
வளைந்த கோட்டைப் பாருங்கள் } x2

குறுக்கும் நெடுக்கும் பாய்ந்தோடும்
பெருக்கல் கோட்டைப் பாருங்கள் } x2

கோட்டு மேலே...
நடந்து வந்து...
பரிசைத் தட்டிச் செல்லுங்கள் } x2

(ஓடி இங்கே)


## செய்து பாருங்கள்

மாணவர்களே, உங்களுக்குத் தெரிந்த வேறுவகை கோடுகளைப் பயன்படுத்தி பாடலைப் பாடுக.



சரியான சுவாச முறையோடு பாடலைப் பாடுங்கள்.

மெதுவாக ஓடிக் கொண்டே இப்பாடலைப் பாடினால் என்ன நிகழும் என்று கூறுங்கள்.



**ஆசிரியர் குறிப்பு**

2.2.1
2.2.2
2.2.3
1.2.1
1.2.3


- பாடலைக் கேட்டு அதன் தாள அளவினை அறிதல்.
- பாடிக் கொண்டே கோட்டின் மேலே நடப்பதற்கு மாணவர்களைக் கட்டளையிடுதல்; வழிகாட்டுதல்.
- கோடுகளின் வடிவங்கள், பாடல்கள் பற்றி கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** தகவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** ஒற்றுமை

# அலகு 2 சுற்றுச் சூழலும் நாமும்

‘மொந்தாஜ்’ என்பது ஒரே தன்மையிலான அல்லது ஒரே தலைப்பிலான சேர்ப்பு ஒட்டுப்படம். கணினி, இதழ், புகைப்படம், நாளிதழ், விளம்பர ஏடு போன்றவற்றில் உள்ள படங்களைக் கத்தரித்து அல்லது கிழித்து நமது கற்பனைக்கேற்றவாறு ஒட்டி உருவாக்கும் கலையே ‘மொந்தாஜ்’.



1 இணையத்தளம்




2 கேலிச்சித்திர இதழ்





3 விளம்பரப் புத்தகம்

ஒரே தலைப்பிலான சேர்ப்பு ஒட்டுப்பட படைப்பில் இடைவெளி முக்கியப் பங்காற்றுகிறது. அருகில் உள்ள பொருள் மிகத் தெளிவாகவும் பெரிதாகவும் தென்பட வேண்டும். தொலைவில் உள்ள பொருள்கள் சிறிதாகக் காட்சியளிக்க வேண்டும்.




ஒரு பொருள் நிலையான தன்மையில் இருக்கும்போது சமநிலையான நிலைப்பாடு உருவாகும்.


சாய்வு நிலை


சரிசம நிலை


முக்கோண நிலை


**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.1(ii)

- மாணவர்களிடம் 'மொந்தாஜ்' குறித்தும் அதில் தொடர்புடைய வடிவம், இடைவெளி, சமநிலை, ஒரே நிலைத்தன்மை ஆகிய கூறுகளைக் கூறும்படித் தூண்டுதல்.
- கத்தரித்தல், ஒட்டுதல் நுட்பத்தின்வழி 'மொந்தாஜ்' படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

## புத்தகக் குறியீட்டு அட்டை






ஒரே நிலைத்தன்மையைக் காட்டும் படம்

## நடவடிக்கை

அ. மேல் இடம்பெற்றுள்ள புத்தகக் குறியீட்டு அட்டை போன்று, நீங்கள் படைத்த “மொந்தாஜ்” படைப்பினைக் கொண்டு எளிய வழியில் ஒரு பொருளை உருவாக்கவும்.

ஆ.
- மரங்களை நேசிப்போம்
- அறிவியலின் ஆற்றல்
- என் இனிய குடும்பம்
- சுற்றுச் சூழலைக் காப்போம்

மேற்கண்ட ஏதாவது ஒரு தலைப்பில் “மொந்தாஜ்” நடவடிக்கையை மேற்கொள்ளவும்.

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1(ii)
- கத்தரித்தல், ஒட்டுதல் நுட்பத்தின்வழி ‘மொந்தாஜ்’ படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் - மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# வாழ்த்து அட்டை

வாருங்கள் ஒரே தலைப்பிலான சேர்ப்பு ஒட்டுப்பட நுட்பத்தில் வாழ்த்து அட்டை தயாரிப்போம்.

1



2



3






ஒட்டி முழுமைப்படுத்தவும்.

**ஆசிரியர் குறிப்பு**

3.1.1(i-iv)
4.1.1
4.1.2

- கத்தரித்தல், ஒட்டுதல் நுட்பத்தின்வழி கலைப் படைப்பினைப் உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- படைப்பினைளச் சீர்மைப்படுத்தத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல் / அறிவும் ஆர்வமும்

# விலங்ககம்



படம் கத்தரித்தல்



கத்தரித்த படம்



ஒட்டுதல்



வண்ணத்தாள் கத்தரித்தல்




தலைப்பு எழுதுதல்




நூலில் கோர்த்து ஒட்டுதல்




முழுமையான படைப்பு

## கருவியும் பொருளும்

கத்தரிக்கோல்



பசை




சித்திரத்தாள்




வண்ணத்தாள்



இதழ்



நூல்




**ஆசிரியர் குறிப்பு**

3.1.1(i-iv)
4.1.1
4.1.2


- கத்தரித்தல், ஒட்டுதல் நுட்பத்தின்வழி 'கலைப் படைப்பினைப் உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- படைப்பினைச் சீர்மைப்படுத்த தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல் / அறிவும் ஆர்வமும்

# சுர தாளக் குறியீடு அறிவோம்




சுர தாளக் குறியீட்டை வரைந்திடுக.




சுர தாளக் குறியீட்டின் வகையையும் மதிப்பையும் அடையாளம் காணுவோம்.

| குறியீடு | பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 𝅝 | செமிபிரிவ் | 4 |
| 𝅗𝅥 | மினிம் | 2 |
| 𝅘𝅥 | குரோச்செட் | 1 |

இக்கணிதத் தொடர்களுக்கு விடை காண்க.

அ) 𝅘𝅥 + 𝅘𝅥 + 𝅗𝅥 = ☐

ஆ) 𝅝 − ☐ + 𝅘𝅥 = 3

இ) ☐ + ☐ − ☐ = 2


ஆசிரியர் குறிப்பு


1.2.2

- B, A, G சுர தாளக் குறியீட்டை ஒவ்வொன்றாக அடையாளம் காணுதல். இசை வரைக்கோட்டில் வரையச் செய்தல்.
- சுர தாளக் குறியீட்டின் மதிப்பை அறிதல். மாணவர்களைக் குறியீட்டை மனனம் செய்ய ஊக்குவித்தல்.

# குறியீட்டுத் தாயக்கட்டை

மாணவர்களே B, A, G குறியீட்டை இசை வரைகோட்டில் எழுதி கூறுங்கள்.




**விளையாடும் முறை**

1. மேற்கண்ட குறியீடுபோல் பகடையில் இருக்க வேண்டும்.
2. மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.
   வெண்பலகையைப் புள்ளி எழுத பயன்படுத்துதல்.
3. குழு A வில் உள்ள ஒரு மாணவர் பகடையை உருட்டக் குழு B யில் உள்ள மாணவர்கள் அந்தக் குறியீட்டை வாசிப்பர்.
4. விடை சரியாக இருந்தால் ஆசிரியர் புள்ளி வழங்குவார்.
5. ஆறு பக்கங்கள் உருளும்வரை விளையாட்டைத் தொடரவும்.
6. அதிகப் புள்ளிகள் பெற்ற குழுவே வெற்றிப் பெற்ற குழு.

1.2.2

ஆசிரியர் குறிப்பு
- B, A, G சுர தாளக் குறியீட்டை வாசித்துக் கூறப் பணித்தல்.
- குழுவாக இயங்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** தகவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# பாடுவோம் வாருங்கள்

தடம் 14 Lagu
தடம் 15 Instrumental

**அழகொன்று கண்டேன்**

அழகொன்று கண்டேன் - கவரும்
அழகொன்று கண்டேன் (x2)
காவியம் கண்டேன்
ஓவியம் கண்டேன் (x2)
வண்ணக் காட்சிகள் கண்டேன் (x2)

இயற்கை அழகைக் கண்டேன்
இறைவன் படைப்பினைக் கண்டேன் (x2)
ஓவியர் திறமையைக் கண்டேன்
மன மகிழ்ச்சி கொண்டேன் (x2)

(அழகொன்று)




2.2.1
2.2.2
2.2.3
1.2.3
1.2.1

ஆசிரியர் குறிப்பு

- பாடல் வரிகளை வாசிக்கத் தூண்டுதல்.
- பாடலை உய்த்துணரத் தூண்டுதல்.
- பாடலைச் சரியான அசைவு, குரல் ஏற்றத்தாழ்வோடு பாடத் தூண்டுதல்.



**வி.வ.கூ:** தககவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# அலகு 3 நேசத்தைப் பதிப்போம் தேசத்தை மதிப்போம்



தேசத்தை மதிப்போம்
மனதில் நேசத்தை விதைப்போம்!

வேற்றுமை மறந்து
உறவில் ஒற்றுமை வளர்ப்போம்! x2

சோதனை கடந்து
தினமும் வெற்றியைச் சுமப்போம்! x2


பகைமையை மறந்து
நல்ல உறவினை வளர்ப்போம்! x2

(தேசத்தை மதிப்போம்)

தடம் 16 Lagu Patriotik

# பதித்ததில் பல்வகை

ஒரு பொருளின் மேல்தள வடிவத்தின்வழி படைப்பினை உருவாக்க பதித்தல் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இயற்கைப் பொருள்களின் மேற்பரப்பில் வண்ணத்தினைப் பூசி, தாளில் பதிப்பதின்வழி அழகான படைப்பினை உருவாக்கலாம். சிறந்த படைப்பினை உருவாக்குவதற்கு நல்ல கற்பனை ஆற்றலும் கருவியைக் கையாளும் திறனும் அவசியமாகிறது.




பதித்தல் நடவடிக்கைகளில் நுட்பமிக்க வடிவத்தை பெற திரவ வண்ணக் கலவை அளவு எத்தகைய நிலையில் இருக்க வேண்டும்?

ஆசிரியர் குறிப்பு

1.1.5

- உருவம், மேல்தள வடிவமைப்பு, எதிர்மறை, பல்வகை ஆகிய கூறுகளைப் பதித்தல் கைவண்ணத்தில் அடையாளங்கண்டு அதன் பயன்பாட்டை வகைப்படுத்தி கூறப் பணித்தல்.

## பதித்தலின் படைப்புகள்






மேலே உள்ள இந்த இரு படைப்புகளையும் உற்று நோக்குங்கள்.

### நடவடிக்கை 1

அ. அதன் உருவாக்க நுட்பத்தினை விளக்கவும்.
ஆ. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டறியவும்.
இ. வீட்டின் சுவருக்கு அல்லது வீட்டின் அறைக்கு எத்தகைய உருவாக்கம் சிறந்ததாகக் கருதுகிறாய்? ஏன்?




பதித்தலில் வண்ணப் பூச்சின்வழி சுபிட்சமான படைப்பினை உருவாக்கலாம்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.5
2.1.2

- உருவம், மேல்தள வடிவமைப்பு, எதிர்மறை, பல்வகை ஆகிய கூறுகளைப் பதித்தல் கைவண்ணத்தில் செயல்முறைப்படுத்துதல்.
- கலைப்படைப்பை உருவாக்கப் பயன்படுத்தும் உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிந்து கூறும்படி பணித்தல்.


**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறிவும் ஆர்வமும்

## பதித்தல் கோலம்

**பாதுகாப்பு**


கத்தியை ஆசிரியர் துணையுடன் கவனமாகப் பயன்படுத்தவும்.

1




வெட்டிய வாழைத் தண்டில் வண்ணம் பூசவும்.

2




தளத்தில் பதித்தல்.

3




வெங்காயத்தைப் பாதியாக வெட்டுதல்.

4



வடிவம் உள்ள பகுதியில் வண்ணம் பூசுதல்.

5



சித்திரத்தாளில் பதித்தல்.

6



நிறைவு செய்தல்.



முழுமையான படைப்பு

## கருவியும் பொருளும்

சித்திரத்தாள்





தூரிகை



திரவ வண்ணம்



வெங்காயம்



வாழை இலை தண்டு




ஆசிரியர் குறிப்பு

2.1.2
3.1.2 (i-iv)

- கலைப்படைப்பை உருவாக்கப் பயன்படுத்தும் உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிந்து கூறும்படி பணித்தல்.
- ஆக்கத்திறன் மிகுந்த கோல உருவாக்கத்திறனைப் படைத்தல்.


## சேமிப்பு உண்டியல்

1



பதித்தல் படைப்பு

2



வெட்டிய பகுதி

3



ஒட்டுதல்

4



துளை இடுதல்

5



நிறைவு செய்தல்



முழுமையான படைப்பு

## கருவியும் பொருளும்

பதித்தல் கோலம்



காலிப் புட்டி



கத்தரிக்கோல்



பசை




### பாதுகாப்பு

கத்தியை ஆசிரியர் துணையுடன் கவனமாகப் பயன்படுத்தவும்.

**ஆசிரியர் குறிப்பு**

3.1.3(i-iv)
4.1.1
4.1.2

- பதித்தல் நுட்பத்தின் வழி பயன்பாட்டுப் பொருளை உருவாக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.


# இசையின் வேகம்





## நடவடிக்கை 1 வேகத்திற்கு ஏற்ப இயங்குதல்.

நடவடிக்கையின் படிநிலைகள்

1. பட அட்டையைத் தயார் செய்யவும் (முடி தடை படம்).



2. மாணவர்கள் பட அட்டையைத் தெரிவு செய்வர்.
3. (வேகத்திற்கு ஏற்ப) படத்தில் உள்ளதுபோல் இசைந்து காட்டுவர்.
4. பிற மாணவர்கள் இசை வேகத்தை அனுமானித்துக் கூறுவர்.



**ஆசிரியர் குறிப்பு**

2.2.3
2.2.7

- ஆமையும் முயலும் கதையை வீடியோவில் காணுதல்.
- இரு விலங்குகளின் வேகத்தை இசை வேகத்தோடு ஒப்பிட்டுக் கலந்துரையாடுதல்.



**வி.வ.கூ:** தகவல் தொழில்நுட்பம் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# கூட்டுப் பாட்டு

தடம் 17 Lagu Tempo Cepat
தடம் 18 Lagu Tempo Lambat
தடம் 19 Instrumental Cepat
தடம் 20 Instrumental Lambat

பாடலைத் தாளத்திற்கு ஏற்ப விரைவாகவும் மெதுவாகவும் பாடுவோம்.

நீயும் நானும் ஒரு கூட்டு
பாடிடுவோம் ஒரு பாட்டு
இனிமைக் குரலை நீயும் கேட்டு
கையிரண்டை உரக்கத் தட்டு ×2

துள்ளிக் குதித்து ஆடு
கண்கள் மூடி தேடு
பட்டம் விட்டு ஓடு
சும்மா இருந்தால் உனக்குக் கேடு ×2

(நீயும் நானும்)

இன்னும் நிறைய விளையாட்டு
ஒன்றாய் சேர்ந்து களிப்போடு
மாலை நேரம் விளையாடு
சுறுசுறுப்பாய் நடைபோடு ×2

(நீயும் நானும்)



2.2.3
2.2.2
2.2.7

ஆசிரியர் குறிப்பு




- ஆசிரியர் இரு தாள வேக பாடலைக் கேட்கச் செய்தல். அதன் வேறுபாட்டைக் கூறச் செய்தல்.
- பாடலைச் சுயமாக இரு தாள வேகத்திற்கு ஏற்ப பாடச் செய்தல்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து இரு தாள வேகத்திற்கு ஏற்ப பாடச் செய்தல்.
- குழு A - விரைவான தாள வேகம்
- குழு B - மெதுவான தாள வேகம்
- பாடலின் கருப்பொருளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்


# அலகு 4 தொங்காடி



தொங்காடிகளைப் பல வித பொருட்களின் மூலம் உருவாக்கித் தொங்கவிடலாம். கட்டுதல், இணைத்தல், வெட்டுதல், கத்தரித்தல், மடித்தல், முடைதல், தைத்தல் போன்ற நுட்பங்களில் இப்படைப்பை உருவாக்கலாம்.





சரிசமமாக தொங்குவதற்கு சமநிலை, இடைவெளி, உருவம், வடிவம் ஆகிய கலைக்கூறுகள் தொங்காடி படைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.7

- தொங்காடி படைப்பில் இடம்பெற்றுள்ள வடிவம், வண்ணம், பல்வகை, அசைவும் நகர்ச்சியும் ஆகியக் கலைக்கூறுகளை விளக்கும்படியும் அதன் பயன்பாட்டை வகைப்படுத்தி கூறும்படியும் பணித்தல்.



**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** தகவல் நிறைந்தவர்

# கட்டுதலும் தொங்கவிடுதலும்



தொங்காடியில் தொங்கும் பொருட்களைத் தாங்கிப்பிடிக்கும் பொருள் உறுதியாக இருக்கவேண்டும். இதோ உங்களுக்காக சில உதாரணங்கள்:




குவளை குச்சி தட்டு உடைமாட்டி

பொருட்களைத் தொங்கவிடுவதற்கும் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படும் பொருள்கள் அதிக பாரமில்லாமல் இருக்கவேண்டும்.



தொங்காடியில் தொங்கும் பொருள்கள் அசைவதற்கும் சரிசம நிலையில் தொங்குவற்கும் உறுதியாக இருப்பதற்கும் அவற்றை கட்டும் முறையில் கவனம் செலுத்தவேண்டும்.




முடிச்சு போடும் முறை

**ஆசிரியர் குறிப்பு**

2.1.3
2.1.3(i)

- கலைப்படைப்பை உருவாக்கப் பயன்படுத்தும் உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிந்து கூறும்படி பணித்தல்.
- கட்டுதல், பொருத்துதல் நுட்பத்தின்வழி தொங்காடியை உருவாக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

# தங்லோங் செய்வோம்

1

காகிதம் கத்தரித்தல்

2


பசை இடுதல்


3

எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்

4

துளையிடுதல்

5

அட்டையை வட்டமாகக் கத்தரித்தல்

6

துளையிடுதல்

7



நூலைக் கோர்த்தல்

8



நூலைக் கட்டுதல்



தொங்காடி

## கருவியும் பொருளும்

வண்ணத்தாள்



காகித அட்டை



கத்தரிக்கோல்



பசை




நூல்



துளைக்கருவி



ஆசிரியர் குறிப்பு

3.1.4(i-iv)
4.1.1
4.1.2

- உருவமைத்தலும் கட்டுதலும் துறையின்கீழ் தொங்காடியை உருவாக்க வழிகாட்டல்.
- உருவாக்கிய படைப்பினை காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.

# இராகத்தோடு கைத்தட்டு




| குறியீடு | | | |
|---|---|---|---|
| கைத்தட்டுதல் | | | |
| வாய்ப்பாட்டு பாடுதல் | ta | ta _ | ta _ _ _ |
| சுரதாள மதிப்பீடு | 1 | 2 | 4 |

பயிற்சி 1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ta | ta | ta _ | ta | ta | ta | ta _ _ _ |
| | | | | | | |

பயிற்சி 2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ta _ | ta | ta | ta _ | ta | ta | ta | ta _ |
| | | | | | | | |

பயிற்சி 3

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ta | ta _ | ta | ta | ta _ | ta | ta _ _ _ |
| | | | | | | |

படங்களின் குறியீட்டைப் பயன்படுத்தி வேறு எவ்வகை இசைக் கருவியை இசைக்கலாம்?

**ஆசிரியர் குறிப்பு**

2.2.5
3.2.2


- இராகத்திற்கு ஏற்ப கைகளைத் தட்டும் பயிற்சியை ஒவ்வொருவராகச் செய்யத் தூண்டுதல்.
- வாய்ப்பாட்டைக் குழுவாகப் பாடத் தூண்டுதல்.
- குறியீட்டைப் பயன்படுத்தி ராக தாளத்தைக் குழுமுறையில் சுயமாக உருவாக்கத் தூண்டுதல்.



**வி.வ.கூ:** பண்புக்கூறு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21 ஆம் நூற்றாண்டு:** சிந்தனையாளர்

## இராகம் உருவாக்குவோம்

### இராக அமைப்பு சக்கர விளையாட்டு




### விளையாடும் வழிமுறை

1. மாணவர்களைக் குழுவாரியாகப் பிரித்தல்.
2. குழுவில் ஒருவர் இராக சக்கரத்தைச் சுழற்றுவார்.
3. குழுவில் ஒருவர் ஒரு குறியீட்டு அட்டையை எடுப்பார்.
4. குழு உறுப்பினர்கள் குறியீட்டைக் கொண்டு இராகம் அமைப்பர். 
5. உருவாக்கிய இராக அமைப்பைப் படைப்பர். மற்ற குழு உறுப்பினர்களும் இணைந்து கை தட்டுவர்.

### தகவல்

குறியீடு இராகத்தின் சேர்க்கையைக் கொண்டு வெவ்வேறு அல்லது ஒரே மாதிரியான தாள அமைப்பை உருவாக்கலாம்.

### கவனத்திற்கு

மாணவர்களே, பழங்களின் குறியீட்டைத் தவிர்த்து வேறு எந்தக் குறியீட்டைக் கொண்டு தாள அமைப்பை உருவாக்கலாம்?

**ஆசிரியர் குறிப்பு**

3.2.2
3.2.3
2.2.5
3.3.6
3.3.7

- குறியீட்டு அட்டைகளைக் கொண்ட 4 பாத்திரங்களைத் தயார்படுத்தவும்.
- குறியீட்டு அட்டைப் போன்று மாணவர்களை கை தட்டக் கூறவும் ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** புத்தாக்கம் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

## இசைக்கருவிகளை அறிவோம்

பெயர்: கஞ்சனக் கட்டை
(நெகிழி மற்றும் மரத்தால் செய்யப்பட்டது.)

**இசைக்கும் முறை :**

- ஒரு கையின் மையப் பகுதியில் கஞ்சனக் கட்டையை வைத்தல்.
- பிடிகயிறை விரலில் நுழைத்துப் பிடித்தல்.
- மறுகை விரலில் கட்டையைத் தட்டுதல்.



பெயர்: தம்போரின்
(பலகை மற்றும் நெகிழியால் செய்யப்பட்டது.)

**இசைக்கும் முறை :**

- ஒரு கையில் பிடித்துக் கொண்டு மறு கையில் தம்போரினைத் தட்டவும்.
- தாளத்திற்கு ஏற்ப தட்டவும்.



பெயர்: தாளமணி
(இரும்பால் செய்யப்பட்டது.)

**இசைக்கும் முறை :**

- தாள மணியின் கயிறைப் பிடிக்கவும்.
- தாள மணியைத் தாளத்திற்கு ஏற்ப தட்டவும்.






பெயர்: டிக்டொக் கட்டை
(மரத்தால் செய்யப்பட்டது)

**இசைக்கும் வழிமுறை :**

- ஒரு கையில் டிக்டொக் கட்டையைப் பிடித்துக் கொண்டு மறு கையால் குச்சியைக் கொண்டு தட்டவும்.
- இடதுபுறம் மற்றும் வலதுபுறம் என்று மாற்றி மாற்றித் தட்டவும்.



பெயர்: மணி
(இரும்பால் செய்யப்பட்டது.)

**இசைக்கும் முறை :**

- ஒரு கையில் மணியைப் பிடித்துக் கொண்டு மறு கையால் தட்டவும்.
- தாளத்திற்கு ஏற்ப நிறுத்தி நிறுத்தித் தட்டவும்.

இசைக் கருவிகளை எவ்வாறு நாம் பாதுகாப்பாக வைக்கலாம்?




ஆசிரியர் குறிப்பு


2.2.4
- ஒவ்வொரு இசைக்கருவிகளைப் பற்றி அறிதல்.
- இசைக் கருவிகள் இசைக்கும் முறையைப் பல்லூடகத் திரையில் காண்பித்தல்.
- இசைக் கருவிகளை இசைத்தல். பின் நண்பர்களிடம் கருவிகளை மாற்றி இசைத்தல்.


# தாளத்திற்கேற்ப இசைப்போம்

கொடுக்கப்பட்ட தாள அமைப்பைக் கொண்டு இசைத்துக் கொண்டே பாடவும். கைத்தட்டலுக்குப் பதிலாக இசைக் கருவிகளின் துணையுடன் உருவாக்கிய இராகத்திற்கு ஏற்ப இசையை எழுப்புங்கள்.






முழுப்பாட்டையும் இவ்வாறே தாளத்தோடு இசைத்துப் பாடுக.

**ஆசிரியர் குறிப்பு**

2.2.5
2.2.4
2.2.3
2.2.2
3.2.2
3.2.3

- ஒவ்வொரு இசைக்கருவியின் ஒலியைச் செவிமடுக்கச் செய்தல்.
- இராகத்திற்கும் தாளத்திற்கும் ஏற்ப இசைத்திடச் செய்தல். (மெதுவாக, விரைவாக)
- இசைக்கருவிகளை நண்பர்களிடம் மாற்றி இசைத்திடச் செய்தல்.

**வி.வ.கூ:** பண்புக் கூறுகள் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** குழுவாகச் செயல்படுதல்

# அலகு 5 பாரம்பரியத்தைக் காப்போம்

முடைதல் பாரம்பரிய கைவினைத் திறனாகும். ஓலை, மூங்கில், கோரை, குச்சி இன்னும் பல பொருள்களைக் கொண்டு முடைதல் நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஓர் இடைவெளியைவிட்டு இன்னோர் இடைவெளியில் முறையாக இந்த முடைதலை மேற்கொண்டால் அழகான வடிவத்தில் பொருளினை உருவாக்கலாம்.




**ஆசிரியர் குறிப்பு**

1.1.9 • முடைதல் கைவண்ணத்தில் இடம்பெற்றுள்ள கோடு, மேல்தள வடிவமைப்பு, எதிர்மறை சுபிட்சம் ஆகிய கூறுகளைப் பட்டியலிட்டு தொடர்புபடுத்தி கூறும்படியும் தூண்டுதல்.

## நடவடிக்கை 1

நமது பாரம்பரியத்தில் முரம், தட்டு, கூடை போன்றவை அன்றாட பயன்பாட்டுக் கருவியாக இருந்தது. இப்போது குறைந்துவிட்டது ஏன் என்று நண்பர்களிடம் சேர்ந்து கலந்துரையாடுக.

### சுபிட்சம்

முடைதலில் வெளிப்படும் வடிவங்களை சுபிட்சம் என்று அழைப்பர்.

## நடவடிக்கை 2


கீழ்க்கண்ட சுபிட்சங்களுக்குப் பெயரிடவும். (சுபிட்சங்களை அறிய 'jenis-jenis anyaman' என்ற இணையத்தளத்தினை நாடவும்).



செண்பகப் பூ சுபிட்சம்











## நடவடிக்கை 3

1. 'Tokoh Anyaman' என இணையத்தளத்தில் எழுத்துருவேற்றி முடைதலின் முன்னோடிகளைப் பட்டியலிடவும். அவர்களின் படைப்புகளைச் சேகரிக்கவும்.


**ஆசிரியர் குறிப்பு**


1.1.9

- முடைதல் கைவண்ணத்தில் இடம்பெற்றுள்ள கோடு, மேல்தள வடிவமைப்பு, எதிர்மறை சுபிட்சம் ஆகிய கூறுகளைப் பட்டியலிட்டு தொடர்புபடுத்தி கூறும்படியும் தூண்டுதல்.


# முடைதலில் செய்முறைகள்

முடைதல் நடவடிக்கை பார்ப்பதற்குக் கடினமாக இருக்கும். ஆனால், எண் குறியீட்டின்வழி முடைதலைச் சுலபமாக்கலாம்.







முடைதல் முறை




1



காகிதத்தை மடித்தல்

2




தளத்தினைக் கத்தரித்தல்

3



மற்றொரு வண்ணத்தாளைச் சிறு துண்டுகளாக கத்தரித்தல்

4



முடைதல்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.4
2.1.4(i)


- உபரணங்கள், நுட்பமுறை, செயல்முறை வாயிலாக கலைமொழி அறிவினைப் பயன்படுத்தி, பாரம்பரிய கைவினைத் திறனில் படைப்பினை உருவாக்க வழிகாட்டல்.

**வி.வ.கூ:** தகவல் தொடர்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** அறிவும் ஆர்வமும்

## விசிறி

மாணவர்களே, வாருங்கள் சுலபமான முடைதல் நுட்பத்தில் விசிறி செய்வோம்.

1




சித்திரத்தாளை மடிக்கவும்

2




கத்தரித்தல்

3




முடைதல்

4




மடித்தல்

5




வடிவமாக கத்தரித்தல்

6




ஓரப் பகுதியில் பசையிட்டு ஒட்டுதல்

7



குச்சி ஒட்டுதல்



முழுமையான படைப்பு

## கருவியும் பொருளும்

வண்ணத்தாள்



பசை




குச்சி



சித்திரத்தாள்




கத்தரிக்கோல்



ஆசிரியர் குறிப்பு

3.1.5(i-iv)
4.1.1
4.1.2

- ஆக்கத் திறன்மிக்க முடைதல் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்து போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21 ஆம் நூற்றாண்டு:** நாட்டுப் பற்று

# முடைதலின்வழி உருவான சில படைப்புகள்











## நடவடிக்கை 3



- இந்த சூடுதாங்கி எப்படி செய்வதென்று நிரலொழுங்கு வரைபடத்தில் வழிகாட்டவும்.
- நண்பர்களிடம் அனுபவத்தைப் பகிரவும்.



நிரலொழுங்கு வரைபடம்

ஆசிரியர் குறிப்பு

3.1.5(i-iv)

- முடைதலில் பயன்பாட்டுக் கலைப் படைப்பினை உருவாக்க மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருத்தல்.

# ரெக்கோடர் அறிவோம்

முன்பகுதி



பின்பகுதி



ரெக்கோடர் பிரிவுகள்




## பாதுகாக்கும் முறைகள்

